நிர்மல்




நான் ஜார்ஜியாவின் இரும்புக் கம்மான். சோவியத் யூனியன் உடைந்த பின் எங்கள் நாடு எல்லாமே பழைய இரும்பும், துருவும்தான். என்னைக் கட்டியிருக்கும் இந்த துருப்பிடித்த சங்கிலி என் குடும்பத்தவர் செய்ததாகக் கூட இருக்கலாம். காங்கிரீட்டை விடக் குளிர்காலத்தில் இரும்பு ஸ்பெஷல். காங்கிரீட் தூண் இரும்பை விடக் குளிர்ச்சியானது. இரும்புக்கு வெப்பம் நினைவிருக்கும். காங்கீரிட்டில் இல்லை. இன்றைக்கு இரும்பும், காங்கீரிட்டும் என் உடலோடு ஒட்டி இருந்தன. என்னைத் காங்கிரீட் தூணோடு வைத்துக் கட்டியிருந்தார்கள். காகசஸ் மலைகளின் குளிர்காற்று அந்த உடைந்த வாகன நிறுத்துமிடத்தில் நுழைந்து, நிறைந்து ஓநாய் போல் ஊளையிட்டது.

இ ரு ம் பு ச் சங் கி லி எ ன் ம ணி க் க ட் டு க ளை அரித்துக்கொண்டிருக்கிறது. கூர்மை இல்லை, அதன் இறுக்கம், கனம் என்னை உண்ணுகிறது. சங்கிலியில் என் இரத்தம் ஓடுகிறது, வேகம் தணிகிறது, கெட்டியாகிறது. நான் அசையும்போது, சங்கிலி முதலில் பதில் சொல்கிறது. தாழ்ந்த ஓசை. மிருகத்தின் முனகல். வாகன நிறுத்துமிடம். இவர்கள் எங்கே இரும்புச் சங்கிலியைக் கண்டார்கள். காரில் வைத்து இருந்தானோ?


பனி நேராகக் கீழே விழுகிறது. அமைதியாக. என் முழங்காலில் விழுகிறது; உருகுகிறது; ஊறுகிறது. குளிர் ஏறுகிறது. என் காலணிகள் ஏற்கனவே இறந்துவிட்டன.



ஓவியம் : டோரதி



என் வாயில் துருப்பிடித்த சுவை. உப்பு. நான் நாக்கை அசைக்கவில்லை. அதை நான் கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு முறை முயலும்போது, சூடாக ஏதோ கொட்டுகிறது, நான் மூச்சுத் திணறுகிறேன். வாய் திறந்து மூச்சு விடுகிறேன். மூடுபனி வெளியே வருகிறது. போகிறது.



மயங்காதே. இரு.

அவர்கள் என்னை அடித்தார்கள். மூவரும். கைகள், காலணிகள், கடினமான ஏதோ. நான் விழுந்ததும் எழுந்ததும் நினைவிருக்கிறது. சங்கிலி என்னைப் பிடித்தது. கேளி ஒருமுறை என் பெயரைச் சொன்னதும் நினைவிருக்கிறது. பிறகு அவள் உதை என் கால்களுக்கு இடையே விழுந்தது.

இப்போது அவர்கள் என்னிடமிருந்து விலகி நிற்கிறார்கள். பேசுகிறார்கள். அவர்களுடைய குரல்கள் காற்றுக்குள் நழுவுகின்றன.

கேளி மிக அருகில் நின்றிருந்தாள். பனி அவள் தலைமுடியில் சிக்கியிருக்கிறது. இந்த விளக்குகளின் கீழ் அவள் முகம் கோரமாகத் தெரிகிறது. அவள் என்னைப் பார்க்கவில்லை... பிறகு பார்க்கிறாள். மீண்டும் திரும்புகிறாள். என்னைப் பார் கேளி. உன் பார்வை இல்லாவிட்டால் நான் ஆழத்தில் விழுந்து விடுவேன். கேளி எப்போதும் சொல்லுவாள்: ஜார்ஜியா பிரான்ஸ் அல்ல, ஜார்ஜியா மிஸ்டிக். பிரான்ஸ் அவளுக்குப் பிடிக்கும். தவாதியை பிடிக்கும், அதனால் பிரான்ஸ் பிடிக்கும். ஆனால் இன்றைக்கு அந்த ப்ரான்ஸ் இங்கே இல்லை. மிஸ்டிக்கான ஜார்ஜியாவில் தவாதி இருக்கிறான், கேளி இருக்கிறாள், ஆனால் புனெபாவும் இருக்கிறாள்.

தவாதி நடந்து கொண்டிருக்கிறான். எப்போதும் அசைந்து கொண்டே இருப்பவன். கைகள் தேய்த்துக்கொண்டே. பேசிக்கொண்டே. அவன் பேசும்போது கேளியைப் பார்க்கிறான். அதுதான் என் நம்பிக்கை. பள்ளிக் காலத்தில் இருந்தே அவன் பார்வையில் இதைக் கண்டுள்ளேன். கேளிக்கும் அது தெரியும். அதனால்தான் அந்தக் கிறுக்கனிடம் எனக்காகப் பேசிக் கொண்டுள்ளாள்.

ஆழத்தில் குதிக்கையில் ஒரு கயிற்றைக் கட்டிக் கொள்வது போல் கேளியின் மீதான நம்பிக்கையை என்னுடன் கட்டிக் கொண்டுள்ளேன்.

தவாதி கிறுக்கன், எரிமலை. எப்பொழுது வெடிப்பான் எனத் தெரியாது. சின்ன வயதில் காய்கறித் தோட்டங்களில் நாங்கள் திருடும் பொழுது கூட சமயத்தில் என்னை அடித்து விடுவான். இன்றைக்கும் எனக்கு ஏன் எனத் தெரியாது? வலி மட்டுமே தெரியும். ஆனால் கேளியிடம் அப்படி நடந்து கொள்வதில்லை. அவன் பார்வையில் ஒரு மேகத்தினைக் கொடுத்து அதில் கேளியை வைத்துக் கொள்வான். ஆனால் என்னிடம் அப்படி இல்லை, இன்றைக்கும் அவன்தான் என்னை அதிகம் அடித்தான். அடிக்கையில் அவனுக்கு முகம் மலரும். ஏன்? எனக்கு அதைக் கண்டு பயம் உண்டு.

சற்றுத் தள்ளி புனெபா கார் அருகில் நிற்கிறாள். பணத்தின் அருகில். கட்டுகள் மோசமாக அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றை எடுக்கிறாள், உள்ளங்கையில் நிறுக்கிறாள். திரும்ப வைக்கிறாள். இன்னொன்றை எடுக்கிறாள். அவள்

**இறப்பு இப்படித்தான் இருக்கும். முதலில் அவமானம். பிறகு குளிர். பிறகு ஒன்றுமில்லை. ஆனால் எனக்கு இன்றைக்கு இறக்க விருப்பம் இல்லை**

விரல்கள் நிலையானவை. அவசரப்படவில்லை. சந்தையில் பழம் தேர்ந்தெடுப்பது போல் ஒவ்வொரு கட்டையும் தொடுகிறாள்.

இன்று என்னைத் தன் கனமான காலணிகள் கொண்டு மிதித்த பொழுதும் புனெபா ஒருபோதும் என்னை முழுமையாகப் பார்க்கவில்லை. நேற்று இரவு என்னுடன் படுக்கையில் இருக்கையிலும் அப்படியே இருந்தாள். என் முகத்திலிருந்து எதையோ அளந்து விட்டு, அவள் கண்கள் உடனே என் மேல் இருந்து வழுக்கி விடும். மனிதர்களைப் பார்க்கும் பார்வை அல்ல அது. பொருட்களைப் பார்ப்பது போல எனக்குத் தோன்றியது.

அவள் முகத்தைப் பார்க்கிறேன். ஒன்றும் அசையவில்லை.

நான் பார்க்கிறேன் என்று அவளுக்குத் தெரியும். அவளுக்குக் கவலையில்லை.

அவளால் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது?

பணம். நாற்பத்தேழாயிரம். அது தான் எண்ணிக்கை. இப்போது அதில் ஏதோ காணவில்லை.

ஏன் நான்? என் மேல் ஏன் சந்தேகம்?

என்னால்தானே இந்தப் பணம் கிடைத்தது. என் முதலாளியின் பணம். பெட்டியின் மீது தெரிவது என் முதலாளியின் ரத்தம். தவாதி முதலாளியைச் சுடும் பொழுது, பணப்பெட்டியை முதலில் எடுத்தவள் கேளி. அதை முதலில் நாங்கள் கொண்டு வந்த காரில் இருந்து வைத்திருந்தது புனேபா. திறந்து எண்ணியதும் அவர்கள்தான். நான் பணப்பெட்டியுடன் தனித்து இருந்தது வெறும் ஐந்து நிமிடங்கள்.

எப்படி என்னைப் பிடித்தார்கள். என் தாடை வலிக்கும் வரை கேள்வியை மென்று கொண்டிருக்கிறேன்.

நான் ஏழை இரும்புக் கம்மான். கிராம மனிதன். வீடுகள், கடைகளின் வாயில்களை சரி செய்கிறேன். கீல்களை செய்வேன். சங்கிலிகள் செய்வேன். எப்பொழுதாவது சிறிய பொருட்களைத் திருடுகிறேன். யாரிடமும் சத்தம் போடாமல் அமைதியாக மறையும் பொருட்கள்.

நான் ருஸ்தாவி நகரத்துக்கு ஒரு கார் ஓட்டுநராக வந்தேன்... அது தவறா? இங்கே ஏன்? இப்படி...? இதற்காக நான் ஏன் இறக்க வேண்டும்?

என் நெஞ்சு இறுகுகிறது. மூச்சு விடுவது வலிக்கிறது. காற்றை மிக ஆழமாக இழுக்கும்போது என் விலா எலும்புகளுக்குள் ஏதோ சடசடக்கிறது.

என் தாடியிலிருந்து இரத்தம் சொட்டுகிறது. பனியில் விழுவதைப் பார்க்கிறேன். கருமை. இன்னும் கருமை. புதிய வெள்ளைக்கு அடியில் மறைகிறது.

அடிபடும்போது சிறுநீர் கழித்தேன். இப்போது நினைவுக்கு வருகிறது. என் காலில் வெப்பம் பரவியது. கேளி பின்வாங்கினாள். தவாதி சிரித்தான். அவன் சிரிப்பு கொடூரமாக இல்லை, கிட்டத்தட்ட மென்மையாக இருந்தது. நான் ஏதோ நகைச்சுவை சொன்னது போல இருந்தது.

இப்போது என் தொடைகள் உறைந்திருக்கின்றன. சிறுநீர் என் தோலில் பனிக்கட்டியாகிவிட்டது.

இறப்பு இப்படித்தான் இருக்கும். முதலில் அவமானம். பிறகு குளிர். பிறகு ஒன்றுமில்லை. ஆனால் எனக்கு இன்றைக்கு இறக்க விருப்பம் இல்லை. கேளி பேசி மீட்பாள்.

புனெபா எங்களை நோக்கி

நடக்கிறாள். அவள் காலணிகள் பனியினை நொறுக்குகின்றன. தவாதி அருகில் நிற்கிறாள். என்னைப் பார்க்காமல் பேசுகிறாள்.

“இவன்தான் எடுத்தான்,” என்கிறாள். அவள் குரலில் தெளிவு எனக்குத் தெரிகின்றது.

தவாதி பதில் சொல்லவில்லை. என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறான்.

கேளி நகர்கிறாள். அவள் தாடை இறுகுவதைப் பார்க்கிறேன்.

”அது நமக்குத் தெரியாது,” கேளி சொல்கிறாள்.

புனெபா திரும்புகிறாள். கேளியைப் பார்க்கிறாள். பிறகு என்னைப் பார்க்கிறாள். மீண்டும் கேளியை.

“அப்படியானால் யார்?” என்கிறாள். “நீயா?”

கேளியின் முகம் சிவக்கின்றது. நகர்ந்து தவாதியின் அருகில் நின்று கொள்கின்றாள்.


புனெபா புன்னகைக்கிறாள். சிறிதாக.

கேளி தவாதியின் கையைத் தொடுகிறாள். அவன் கரங்களைப் பதிலுக்குத் தொட்டான். அவன் விரல் நுனிகள் மட்டும் அவள் கரங்களில். மென்மையாக. விலையுயர்ந்த வைரமொன்றை தொடுவது போல.

“இவனை இங்கேயே விட்டு விட்டுப் போகலாம், நம் பழைய நண்பன்” என்கிறாள் கேளி.

கேளியை உற்றுப் பார்க்கிறேன்.

அவள் இப்போது என்னையே பார்க்கிறாள். அவள் கண்கள் என் கண்களில் தங்குகின்றன. நீண்ட நேரம். நான் அதைப் பார்க்கிறேன். சந்தேகம். என்னை நம்பு கேளி எனச் சொல்கின்றேன்.



கேளிக்கு என்னைத் தெரியும், சின்ன வயதில் அவளும் நானும் மோட்டார் வாகனங்கள் விற்கும் கடையில் எங்களுக்கு வேண்டியதைத் திருடிக் கொண்டு வந்த பொழுது தப்பிச் செல்லும் கார் கதவு திறக்கத் தடுமாறினேன். கார் சாவி தொலைந்து விட்டது என்றேன். அன்றைக்கும் இப்படித்தான் உற்றுப் பார்த்தாள். ஆனால் அன்றைக்கு என்னை நம்பினாள். வேறொரு காரை கண்ணாடியை உடைத்துத் திறந்து ஹாட் வையர் செய்து காப்பாற்றினாள். என் அப்பாவின் அடியிலிருந்தும் பலமுறை காப்பாற்றியுள்ளாள். இன்றைக்கும்... என்னை உற்றுப் பார் கேளி... நீ ஒருத்திதான் வழி...

என் வாய் அசைகிறது. ஈரமான ஓசை. வேறு ஒன்றுமில்லை.

கேளி அருகில் வருகிறாள். என் முகத்தினைப் பிடிக்கிறாள். அவள் கை நடுங்குகிறது.

“இவனைப் பார்” என்கிறாள்.

மோசமாக எழுதப்பட்ட ஏதோவொன்றைப் படிப்பது போல தவாதி என் வாயை, என் கைகளை, என் கண்களைப் படிக்கிறான்.

“ஏதாவது சொல்” என்கிறான்.

முயல்கிறேன்.

இரத்தம் என் வாயை நிரப்புகிறது. விழுங்குகிறேன். மீண்டும் முயல்கிறேன்.

“நான்...”

*துப்பாக்கியைத் திருப்பி என் மண்டையில் அடித்தான். எனக்கு ஏற்கனவே இருக்கும் வலியில் அது புதிதாக எதையும் செய்யவில்லை*

வார்த்தை உடைகிறது. இருமலில் கரைகிறது. இன்னும் இரத்தம். பனியில் துப்புகிறேன். துப்பாக்கியைத் திருப்பி என் மண்டையில் அடித்தான். எனக்கு ஏற்கனவே இருக்கும் வலியில் அது புதிதாக எதையும் செய்யவில்லை. சங்கிலியின் கட்டுக்குள் மெல்ல அசைந்தேன். அவன் துப்பாக்கிதான் என் ரத்தத்தினை கறையாக்கிக் கொண்டது. அவன் கையிலும் அப்பிக் கொண்டது.

அதை உற்றுப் பார்த்த தவாதி, தலையை அசைத்து பெருமூச்சுடன் கேளியை நோக்கித் திரும்பினான். எங்கள் மூவரில் அவளே புத்திசாலி. இலக்கியம் படிப்பாள், ஆட்டோ மெக்கானிக் வேலை செய்வாள், கவிதைகள் எழுதுவாள்... எந்தப் பூட்டையும் கள்ளச்சாவி போட்டுத் திறப்பாள். எவருடைய பர்ஸையும் அவர்களுக்கு உடல் அசங்காமல் நொடியில் எடுத்து விடுவாள்... ஜார்ஜியாவில் எங்கு போய் விட்டாலும் அவளுக்குச் சாலைகள் தெரியும். எனக்குக் கேளியைப் பிடிக்கும். ஆனால் என் கண்கள் பார்ப்பது போல, தவாதி கேளியைப் பார்ப்பதில்லை. நான் கேளியை என்னைக் காப்பாற்றும் தேவதையாகவே பார்த்தேன். அவன் வானத்து நட்சத்திரம் எனக் கேளியைப் பற்றி என்னிடம் சொல்வான்.

நாங்கள் ஐந்தாவது படிக்கையில் மெஸ்டியாவிலிருந்து உஷ்குலிக் செல்லும் பாதையில் ஆடுகளைத் திருடி விற்கப் போனார்கள். ஆறு நாட்கள் காணவில்லை. அவர்கள் தொலைந்து விட்டார்கள் என கிராமமே நினைத்தது. திரும்பி வந்தார்கள். அன்றிலிருந்து தவாதியின் பார்வையில் கேளி விஷேசமானாள். ஏன்? யாருக்குத் தெரியும். ஆனால் எல்லாம் மாறி போனது. அதை பற்றி ஊரில் யாரேனும் கேட்டால் சிரிப்பான். தவாதிக்கு கேளி நட்சத்திரமானாள்.

இன்றைக்கும் கேளி இருக்கையில் அவன் குரலில், அசைவில், சிணுங்கலில் அதை என்னால் காண முடியும். எனக்கு அது இன்றைக்கு முக்கியம். கேளி பேசு. என்னைக் காப்பாற்று. அவன் கிறுக்கன். நீ மட்டுமே அவனிடம் பேச முடியும்.

புனெபா ஓர் ஓசை எழுப்புகிறாள். கிட்டத்தட்ட சிரிப்பு. அது என் கவனத்தினை தபாதியிடம் இருந்து திருப்பியது. இவள் சிரிப்பு எனக்குப் பிடிப்பதில்லை. நேற்றிரவு என் படுக்கையில்தான் இருந்தாள்... ஆனால் இது போலச் சிரிக்கவும் எனக்குப் பிடிக்கவில்லை. அவள் மேல் படுத்திருந்த நிலையில் செயல் இழந்து விட்டேன். எரிச்சல்... எழுந்து அறைக்கு வெளியே போனேன். அவள் அறை விளக்கை எடுத்து என் மேல் வீசினாள் என நினைக்கின்றேன். சரியாக ஞாபகம் இல்லை.

“பேசக்கூட முடியவில்லை இவனால்... இவனைக் கொன்று என்ன பயன்?” என்கிறாள் கேளி.

என் அருகில் வந்து என் முகத்தினை நகர்த்தி என் கண்களை அருகிலிருந்து நோக்கினாள். அவள் கண்கள் ஏதோ கேட்கின்றன. நான் செய்தேனா என்று கேட்கின்றன. இந்தத் தொந்தரவுக்கு நான் தகுதியானவனா என்று கேட்கின்றன.

தயவுசெய்து... வார்த்தை முழுமையாக வெளியே வருகிறது. சிறிதாக, ஆனால் முழுமையாக.


கேளியின் மூச்சு அடைகிறது.

“பார்த்தாயா?” தவாதியிடம் கேளி சொல்கிறாள். “இவன் செய்திருக்க மாட்டான்”

புனெபா குறுக்கிடுகிறாள், “எல்லோரும் செய்வார்கள்” என்கிறாள்.

அவள் சொல்வது சரிதான்,

எல்லாரும் செய்வார்கள், யார்தான் செய்ய மாட்டார்கள், பணத்துக்கு யாரிடம் மதிப்பில்லை. என் எண்ணம் உடலைப் போர்த்தியது, உடல் மீது பனி விழுந்துகொண்டே இருக்கிறது. பனிக்குள் இருக்கும் இரும்புச் சங்கிலி என் உடலை கடித்துக்கொண்டே இருக்கிறது. வலி.



ஒரே ஒரு எண்ணத்தைப் பிடித்துக்கொள்கிறேன். கேளி பேசிக்கொண்டே இருந்ததால், நான் உயிர் வாழ்கிறேன்.

அவளால் மட்டுமே தவாதியிடம் பேச முடியும் என்பது என் நம்பிக்கை. அவன் கிறுக்குத்தனத்தினை நிறுத்த முடியும். காரில் என்னைத் தனித்து விட்ட இரண்டாம் நிமிடத்தில் பணத்தினை எடுத்து விட்டேன். அதைக் கேளியின் பையில்தான் ஒளித்து வைத்தேன். அதனால்தான் என் உடையெல்லாம் அலசி ஆராய்ந்தாலும் அதில் ஒரு சின்ன காகிதம் கூட கிடைக்கவில்லை. கேளியின் பையை யார் சோதிக்கப் போகின்றார்கள்? இதெல்லாம் முடிந்ததும் கேளி என்னைத்தான் அவள் பையை தூக்கச் சொல்வாள்.

அருகில் வந்த தவாதி முழங்காலால் முகத்தில் இடிக்கின்றான். "இத்தனை அடி நான் இவனை அடித்ததே இல்லை, இவன் செய்திருப்பானா?" எனச் சொல்கின்றான்.

"இவன் செய்தான் என்று நமக்குத் தெரியாது," கேளி சொல்கிறாள். தவாதிக்கு அருகில் நகர்கிறாள்.

"இவனை காரில் தனியாக விட்டது உன் தவறு" புனெபா காரருகில் இருந்து சொல்கிறாள். தட்டையான குரல். சலிப்பும், கோபமும் இருந்தது.

"ஐந்து நிமிஷம்," கேளி திருப்பிச் சொல்கிறாள். "ஐந்து நிமிஷம் மட்டுமே... தனியாக விட்டேன். அதையே பேசி என்ன பலன்."

"போதும்," புனெபா சொல்கிறாள்.

தவாதியை நான் சின்ன வயதில் என் கிராமத்தில் பார்த்தது. பின்னர் அவன் திபிலிக்கு போனான். திபிலிக்கு போன பின்பு அவ்வப்பொழுது வருவான். கேளியுடன் சுற்றுவான். திரும்பப் போய் விடுவான். ஒரு கட்டத்தில் கேளியும் திபிலிக்கு போனாள். தவாதியுடன் சுற்றிக் கொண்டிருந்தாள். அவள் அப்பா, அம்மா இறக்கவும் மீண்டும் கிராமத்துக்கு வந்து எங்கள் வீட்டில் இருந்தாள். தவாதி கார் திருட ப்ரான்ஸ் போனான். புனேபாவுடன் திரும்பி வந்தது நேற்றுதான் எனக்குத் தெரியும்.

கேளி தான் என்னை என்னை ருஸ்தாவியில் ஓட்டுநர் வேலைக்குக் கூட்டி வந்தாள், வேலைக்குச் சேர்ந்த மூன்று மாதத்தில் அவளிடம் என் முதலாளியின் தொழில் பற்றிச் சொன்னேன். அவர் கையில் உள்ள பணப்பெட்டி பற்றிச் சொன்னேன். பணப்பெட்டியில் பணம் இருக்கலாம் எனச் சொன்னேன். எங்கள் கார் பணப்பெட்டியும், முதலாளியுமாய் போய் வரும் வழி பற்றிச் சொன்னேன். நானாகச் சொன்னேனா... அவளாகக் கேட்டாளா எனத் தெரியவில்லை.

நேற்று மதியம் நான் முதலாளியுடன் காரில் வந்து கொண்டிருந்தேன். முகமூடி அணிந்த மூவர் எங்கள் காரை நிறுத்தினர். பின் சீட்டிலிருந்து காரை முதலாளி “நிறுத்தாதே” எனச் சொன்னதாக எனக்கு ஞாபகம். ஆனால் நான் நிறுத்தினேன். எனக்குக் கேளியை முகமூடியுடனும், முகமூடி இல்லாமலும் தெரியும்.

**மறுநாள் காலையில் நான் கார் ஓட்டும் பொழுதே பணத்தினை எண்ணினார்கள். நாற்பத்தி ஏழாயிரத்தி இருநூறு டாலர் என எனக்குப் புரிந்தது**

முதலாளியை மிரட்டினார்கள். பெட்டியைக் கொடுத்தார். பெட்டியைத் திறக்கும் எண்ணைக் கொடுத்தார். தன் சீட்டுக்குக் கீழே காரின் தரையில் படுத்துக் கொண்டு முகத்தினை மூடிக் கொண்டார். ஒளிய முயன்றாரா? அது தவாதிக்கு புன்னகையைக் கொடுத்திருக்கக் கூடும். தவாதி முகமூடிக்குப் பின் இருந்தான். அந்தக் கணம் அவன் முகம் எனக்குத் தெரியவில்லை. என் ஊகம். அவன் அப்பொழுதுதான் முதலாளியைச் சுட்டான். ரத்தம் என் மேல் படாமல் நான் நகர்ந்து ஒளிந்து கொண்டேன். முகமூடியைக் கழட்டும் பொழுதே அவர்கள் யாரென எனக்குத் தெரிந்தது. புனேபாவை முதல் முறை பார்த்தேன். தபாதியை பல வருடம் கழித்துப் பார்த்தேன்.

எனக்கு 500 டாலர் கொடுப்பதாக உறுதி கொடுக்கவும், முதலாளியை எடுத்து ஆள் அரவம் இல்லாத இடத்தில் புதைக்க உதவி செய்து, காரை எடுத்துக் கொண்டு ஒரு விடுதிக்குச் சென்று இரவு தங்கினோம். புனேபா காரிலேயே என் உதடுகளைக் கவ்வி முத்தமிட்டாள். அப்புறம் அவள் பெயரைச் சொன்னாள். என் பெயரை அவள் கேட்கவில்லை. கேளியும், தவாதியும் கண்டு கொள்ளவில்லை. 300 கிலோமீட்டர் தள்ளி ஒரு விடுதிக்குச் செல்கையில் நள்ளிரவு.

மறுநாள் காலையில் நான் கார் ஓட்டும் பொழுதே பணத்தினை எண்ணினார்கள். நாற்பத்தி ஏழாயிரத்தி இருநூறு டாலர் என எனக்குப் புரிந்தது.

ஐநூறு டாலர். எனக்குப் பெரியது, ஒரு வருட சம்பளம். நாற்பத்தேழாயிரம். மூன்று பேருக்கு. எனக்கு வெறும் ஐநூறு சரியா என்ன?

அதனால் என் முதலாளியின் பெட்டியை திறந்து மூவாயிரம் எடுத்தேன். முதலாளி பயன்படுத்தும் எண் எனக்குத் தெரியும். அவர்கள் காப்பி குடிக்கப் போகையில் எடுத்து காரின் மேட்டுக்கு கீழே பரப்பி வைத்தேன். இந்த அடியைத் தாங்கி உயிருடன் வெளியே வந்தால் எனக்கு மூவாயிரம் ரூபாய். ஆறு வருட சம்பளம். எனக்குப் பிடித்த மதுவை, பெண்களைப் பார்க்கலாம்.

"நீ ஏன் இவனைக் காப்பாற்றுகிறாய்?" தவாதி கோபமாகக் கேளியிடம் சொல்கிறான். அவன் குரல் மென்மையாகிறது. "புரிகிறது. உன் நண்பன். உள்ளூர் பையன். அது... உண்மையில் மனம் தொடுகிறது."

அவள் அவனது மனம் தொடவேண்டும், ஆண்டவரே அவள் மனம் தொட வேண்டும்...

கேளியின் தாடை இறுகுகிறது. "இது நட்பு பற்றியதல்ல. இது உண்மைகள் பற்றியது. நம்மில் யாரும்..."

"ஆனால் நாம் செய்யவில்லை," புனெபா குறுக்கிடுகிறாள். "நமக்கு நம் பங்கு தெரியும். நாமே நம்மிடமிருந்து ஏன் திருடுவோம்?"


"ஒருவேளை நீங்கள் ஆரம்பத்தில் எவ்வளவு இருந்தது என்று பொய் சொல்லிக் கொண்டிருக்கலாம்," கேளி சொல்கிறாள். அவள் குரல் கடினமாகிறது. கூர்மையாக. "ஒருவேளை ருஸ்தாவியில் தவறாக எண்ணியிருக்கலாம்."

தவாதி புருவங்களை உயர்த்துகிறான். புனெபாவைப் பார்க்கிறான்.

புனெபாவின் முகம் மாறவில்லை. "இரண்டு முறை எண்ணினோம். இரண்டாவது எண்ணிக்கைக்கு நீ இருந்தாய்."

"உன் சொல்லிதான் எண்கள் பார்த்தேன்," கேளி சொல்கிறாள். "நானே எண்ணவில்லை."

"நீ எங்களைக் குற்றம் சாட்டுகிறாயா?" தவாதி கேட்கிறான்.



"நாம் எல்லோரும் குற்றம் சாட்டுகிறோம் என்கிறேன்," கேளி சொல்கிறாள். "ஒரே ஆதாரம் இவன் கடைசியாகப் பணத்துடன் காரில் இருந்தான் என்பது மட்டுமே. அது போதாது..."

"எனக்குப் போதும்," புனெபா சொல்கிறாள். காரிலிருந்து விலகுகிறாள். எங்களை நோக்கி நடக்கிறாள். "இது மிக நீண்டுகொண்டிருக்கிறது."

"ஏனென்றால் நீ கேட்க மாட்டேன் என்கின்றாய்," கேளி கடுமையாகச் சொல்கிறாள்.

"நான் கேட்கிறேன்," புனெபா சொல்கிறாள். "ஆனால் நம்பவில்லை. உன் நண்பனைப் பற்றி உன் தீர்ப்பை நம்ப வேண்டும் என்கிறாய். ஒரு வேலைக்காக வாடகைக்கு அமர்த்திய உள்ளூர் நண்பன். எங்களை அறியாதவன்."

அவள் சரியாகத்தான் சொல்கிறாள். அவர்களுக்கு என்னைத் தெரியாது. நான் வெறும் ஓட்டுநர்.

"அவன் செய்ய மாட்டான்," கேளி வலியுறுத்துகிறாள். இப்போது தவாதியைப் பார்க்கிறாள். புனெபாவை அல்ல. "நான்தான் இவனைக் கூட்டி வந்தேன் ஏனென்றால் நான் அவனை நம்புகிறேன். அவன் உறுதியானவன். நான் உனக்கு ஸ்பெஷல்தானே... எனக்குத்தானே ஜார்ஜியா தெரியும்... உனக்கு வேண்டியதைப் பெற்றுத் தரத் தெரியும்." குரலைக் குழைக்கின்றாள்.

"நல்லது கேளி. உன்னை விட்டால் எனக்கு யார் உள்ளார்?" தவாதி சொல்கிறான். அவன் தொடர்கின்றான். "உண்மையில் நீ நம்பிக்கையானவள். அதனால்தான் உன்னை இதற்கு விரும்பினோம். உள்ளூர் அறிவு. உள்ளூர் தொடர்புகள். நீ மதிப்பிடமுடியாதவள், நீ என் கேளி... உன்னைப் போல யார் உண்டு? ஆனால்..."

"ஆனால் என்ன ஆனால்? நான் சொல்வதை நம்பு..." கேளி இறைஞ்சுகின்றாள்.

புனெபா குறுக்கிடுகிறாள். "உன் சிறுவயது நண்பன் பற்றிய உன் தீர்ப்பு வேறு. உனக்குப் பக்கச்சார்பு இருக்கிறது."

"உனக்கு இல்லையா?" கேளியின் குரல் உயர்கிறது. "நீ ஏற்கனவே அவன் குற்றவாளி என்று முடிவு செய்துவிட்டாய். பணம் குறைந்தது தெரிந்த கணத்தில் முடிவு செய்தாய்."

தவாதி மெதுவாகத் தலையசைக்கிறான். "அவள் சொல்வதில் ஒரு பாயிண்ட் இருக்கிறது."

"அவளுக்கு சந்தேக நோய், அவளுக்கும் இவனுக்கும் நேற்று இரவு சண்டை. நான் பார்த்தேன்." கேளி சொல்கிறாள்.

புனெபாவின் முகம் கடினமாகிறது. "அவன்... அந்த சாக வேண்டியவன், திருடன்" அவள் குரல் ஒரு நொடி இறுகியது போல இருந்தது, முகத்தில் கோபம் கூடியது. உடனே மீண்டாள். உணர்வில்லாத தட்டையான குரலைத் தேடி எடுத்தது போலக் குரலை மாற்றிக் கொண்டாள். "எனக்கு தவாதியுடன் பத்து வருடங்கள் வேலை செய்த பழக்கம் உண்டு. பாரிஸ். கார்கள், நகைகள், ஆவணங்கள். எங்களுக்கு ஒருபோதும் பிரச்சனை இல்லை ஏனென்றால் நாங்கள் உணர்ச்சிவசப்பட மாட்டோம்."

**நான் பிழைத்தேன். வாவ்... இந்த அடியும், ரணமும் ஆறிவிடும். மூவாயிரம் டாலர்... வாவ்... நான் வெறும் இரும்புக் கம்மான் இல்லை, அதை விட மேலே!**

புனேபாவின் புன்னகைக்கும் அசைவில்லாத முகம் மீண்டது.

"பத்து வருடங்கள்," தவாதி ஒப்புக்கொள்கிறான். "நாங்கள் ஒருவரை ஒருவர் அறிவோம். எப்படி யோசிக்கிறோம். எப்படி வேலை செய்கிறோம். எல்லாமே இப்பொழுது..." வார்த்தையைத் தேடுகின்றான். கேளியின் கைகள் நடுங்குகின்றது. கண்கள் சிவக்கின்றன. தவாதியை விட்டு நகர்ந்து அவன் எதிரில் நிற்கின்றாள். இப்பொழுது அவள் முகம் எனக்கு தெரியவில்லை.

"அப்படியானால் நான் யார்?" கேளி சொல்கிறாள். அவள் குரல் அமைதியாகிறது.

"இது யார் என்பது பற்றியதல்ல," தவாதி சொல்கிறான். அவன் அவள் கையைத் தொடுகிறான். மென்மையாக. என்னை நோக்கி கை காட்டுகின்றான். "இது க்ளின் அப் வேலை.."

"ப்ளீஸ்..." கேளி இறைஞ்சுகின்றாள் "புனேபா இவனைக் கொல்ல அதிக விருப்பமுள்ளவள். உனக்குத் தெரியவில்லையா?"

மௌனம்.

எனக்கு மூச்சு மெல்ல மீள்கின்றது. கொஞ்சம் சிரிக்கலமா என யோசிக்கின்றேன்.

தவாதி கேளியை அருகே அழைத்தான், இறுக்கி அணைத்துக் கொண்டான். தவாதியின் முகம் என்னை நோக்கி இருந்தது. அவன் கண்கள் என்னை நோக்கி மென்மையாக சிரித்தது. அவன் அணைப்பில் இருந்த கேளியின் பின்புறம் எனக்கு தெரிந்தது. அதிலேயே அவன் அணைப்பில் அவள் நெகிழ்ந்து இருந்ததை பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் இடப்புறம் இருந்த புனேபாவின் உடலில், கண்களில் எதையும் காணவில்லை.

நான் பிழைத்தேன். வாவ்... இந்த அடியும், ரணமும் ஆறிவிடும். மூவாயிரம் டாலர்... வாவ்... நான் வெறும் இரும்புக் கம்மான் இல்லை, அதை விட மேலே! இன்றிரவே இங்கிருந்து ஓடி விட வேண்டும். தவாதியிடம், கேளியிடம், புனேபாவிடம் இருந்து தூரமாக... நிறைய மதுவும் நிறைய பெண்களும் நிறைய கொண்டாட்டங்களும் உள்ள இடத்துக்கு...

தவாதி தலையை இடப் பக்கம் திருப்பி அருகில் நின்ற புனெபாவைப் பார்க்கிறான்.

புனெபா தன் விரலால் என்னைச் சுட்டி சின்னதாகத் தலை அசைத்தாள்.

அடுத்த கணம் என்னை நோக்கி வந்த தோட்டாவினை நான் பார்க்க முடிந்தது. இமைகளில் வழியும் ரத்தம் மறைத்தாலும் தோட்டா தெரிந்தது. மெல்ல மெல்ல ஊர்ந்து வருவதாக தோன்றியது. நிஜம், கனவென தோன்றும் நிஜம்.

எனக்கு அந்தக் கணம் புரிந்தது. கேளி தவாதிக்கு ஸ்பெஷல், அவனுடைய நிஜம் நின்றிருப்பது, முடிவு நின்றிருப்பது புனேபாவிடமே. நேற்று இரவு அவள் படுக்கையில் அவள் சிரிப்பைப் பொறுத்துக் கொண்டிருந்தால்...

கிழிந்த உதடுகளைப் பிதுக்க முயன்றேன். தோட்டா மிக அருகில்... அரை அங்குலம் இருக்குமோ?

தோட்டாவின் பின்னால் தலை முழுக்க செந்நிறத்துடன் கேளியும் தரையை நோக்கிச் சரிந்து கொண்டிருந்தாள். பாவம் ரொம்ப ஸ்பெஷல். என்னை முந்திக் கொண்டாள்.

நெற்றியைத் தொட்ட தோட்டா உள்ளே இறங்குகையில் உலோகத்தின் சூடு குளிருக்கு இதமாக இல்லை. ஏன்?